**சுருக்கம்**

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டில் நகர்புறப் பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) மாணவ மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023–24 ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்துதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை

அரசாணை (நிலை) எண்.33 நாள். 07.06.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054

சோபகிருது வைகாசி 24

படிக்கப்பட்டவை:–

1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 13–01–2023 நாளிட்ட அறிவிப்பு.

2 முன்னாள் மாண்புமிகு அமைச்சர் நிதி மற்றும் மனித வள மேலாண்மை அவர்கள் 2022–2023 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் வெளியிட்ட 29–03–2023 நாளிட்ட அறிவிப்பு.

3 அரசாணை (நிலை) எண்.43, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 27–07–2022.

4. அரசாணை (நிலை) எண்.1, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை, நாள். 13–01–2023.

5. சமூக நல இயக்குநர், அவர்களின் கடித ந.க.எண்.3652/சஉதி–2(1)/2023, நாள். 16–05–2023 மற்றும் 31–05–2023.

------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 13–01–2023 நாளிட்ட அறிவிப்பில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் ஏற்பட்டுள்ள நற்பயனை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியர் பயன் பெறும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 2023–2024 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் ஏனையவற்றிற்கிடையே 20.03.2023

அன்று முன்னாள் மாண்புமிகு அமைச்சர் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

*" முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ... வரும் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள 30 ஆயிரத்து 122 அரசுத் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 18 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இந்த நல்ல நோக்கத்திற்கு வரும் நிதியாண்டில் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."*

த.பி.பா.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மாநகராட்சி, நகராட்சி, ஊரக (கிராம ஊராட்சி) மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1,14,095 தொடக்கப் பள்ளி (1 முதல் 5ஆம் வகுப்பு வரை) மாணவ/மாணவியருக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2022–2023 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக செயல்படுத்திட ரூ.33.56 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (பெருநகர சென்னை மாநகராட்சி நீங்கலாக) ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் பள்ளிகளுடன் சேர்த்து 433 மாநகராட்சி/நகராட்சி அரசு நடுநிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 56,098 தொடக்கப்பள்ளி மாணவ / மாணவியர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 1–ல் விடுபட்ட ஒரு தொடக்கப் பள்ளியில் உள்ள 62 மாணவர்கள் என மொத்தம் 56,160 மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே நடைமுறையில் உள்ள நெறிமுறைகளின் படியும் செலவின விகிதத்திலும் விரிவுபடுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

5. மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் சமூக நல இயக்குநர் அவர்கள், மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை விரிவுபடுத்திட சம்பந்தப்பட்ட திட்ட செயலாக்க முகமை துறை அலுவலர்களிடமிருந்து காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ள அனைத்து பள்ளி / மையங்களின் எண்ணிக்கை விவரங்கள், நிதித் தேவை விவரங்கள் அடங்கிய கருத்துருக்கள் வரப்பெற்றுள்ளன என்று தெரிவித்து, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படவேண்டிய சிற்றுண்டி உணவு வகைகள், பின்பற்றப்பட வேண்டிய பொதுவான வழிமுறைகள், அமைக்கப்பட வேண்டிய மாநில அளவிலான வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் மாவட்ட, வட்டார மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் விவரங்கள் மற்றும் வாங்கி வழங்கப்பட வேண்டிய சமையல் உபகரணங்கள், எரிவாயு இணைப்புகள், பதிவேடுகள் மற்றும் நிர்வாக/திட்ட மதிப்பீட்டிற்கான செலவினம் ஆகியவற்றை அளித்துள்ளார்.

6. மேலும் சமூக நல இயக்குநர் அவர்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை சம்மந்தப்பட்ட முகமை துறைகளான பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தவும், நகர்புறப் பகுதிகளில் (மாநகராட்சி, நகராட்சி மற்றும் அப்பகுதிகளுக்கு அருகில் உள்ள பேரூராட்சிப் பகுதிகள்) செயல்படும் பள்ளிகளுக்கு பெருநகர சென்னை மாநகராட்சி /நகராட்சி நிர்வாகத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக காலை சிற்றுண்டி தயார் செய்து தொடர்புடைய இணைப்பு மையங்களுக்கு வழங்கவும், ஏனைய அனைத்து பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளைப் பொறுத்தவரை அந்தந்தப் பள்ளிகளிலேயே காலை உணவு தயாரித்து வழங்கவும் அனுமதி வழங்குமாறும் இத்திட்டத்தை செயல்படுத்தும் முகமை துறைகளுக்கான தொகையை பிரித்து வழங்க அனுமதி வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

7. சமூக நல இயக்குநர் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகர்ப்புற பகுதிகள் (மாநகராட்சி/நகராட்சி/ பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளிலுள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து தொடக்கப்பள்ளி மாணவ மாணவியரும் பயனடையும் வகையில் 31,008 அரசுப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 18.54 இலட்சம் தொடக்கப்பள்ளி மாணவ/மாணவியருக்கு 2023–2024–ஆம் ஆண்டில் விரிவுபடுத்தி ஆணை வழங்குமாறும் இதன் பொருட்டு ரூ.539.88 கோடி ஒப்பளிப்பு செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

8. சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 2023–2024 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தும் பொருட்டு பின்வரும் ஆணைகளை வெளியிடுகிறது:–

i. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை முதற்கட்டம் மற்றும் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தியபொழுது பயனடைந்த மாணவ/மாணவியரின் சராசரி வருகை மற்றும் உணவு உட்கொள்பவர்களின் சராசரி சதவிகிதத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் நகர்ப்புறப் பகுதிகள் (மாநகராட்சி / நகராட்சி / பேரூராட்சி) மற்றும் ஊரகப் பகுதிகளில் செயல்படும் 31,008 அரசுப் பள்ளிகளில் பயிலும் 15,75,900 தொடக்கப்பள்ளி (1 முதல் 5–ஆம் வகுப்புவரை) மாணவ/மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2023–2024–ஆம் ஆண்டில் விரிவுபடுத்தி அரசு ஆணையிடுகிறது.

ii. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தும் பொருட்டு நடப்பு 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.404,41,31,980/– (ரூபாய் நானூற்று நான்கு கோடியே நாற்பத்தோரு இலட்சத்து முப்பத்தோராயிரத்து தொள்ளாயிரத்து எண்பது மட்டும்) பின்வருமாறு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| 1) தொடர் செலவினம் | |
|---|---|
| பயனாளிகளின் எண்ணிக்கை | உணவூட்டுச் செலவினம் |
| 15,75,900 (1575900 x ரூ.12.71 நாளொன்றுக்கு ஒரு குழந்தைக்கு x 170 நாட்கள்) (15 ஜுலை 2023 முதல் மார்ச் 2024 வரை) | ரூ.340,50,47,130 |
| 2) தொடரா செலவினம் | |
| அ. சமையல் உபகரணங்கள் | ரூ.43,38,00,000 |
| ஆ.எரிவாயு இணைப்பு (வைப்புத் தொகையுடன்) (ரூ.7325x27,258) | ரூ.19,96,64,850 |
| இ. பதிவேடுகள் | ரூ.31,20,000 |
| ஈ.நிர்வாக மற்றும் மதிப்பீட்டுச் செலவினம் | ரூ.25,00,000 |
| தொடரா செலவினம் | ரூ.63,90,84,850 |
| மொத்த செலவினம் (தொடர் மற்றும் தொடரா செலவினம்) | ரூ.404,41,31,980 |

iii. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களை பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 358 பள்ளிகளிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களை ஏனைய மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் உள்ள 2,253 பள்ளிகளிலும், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் அவர்களை ஊரகப்பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள 28,397 பள்ளிகளிலும் ஆக மொத்தம் இவ்வாணையின் இணைப்பு I–ல் குறிப்பிடப்பட்டுள்ள 31,008 அரசுப் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு அலுவலராக நியமனம் செய்யப்படுகின்றனர்.

iv. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் இவ்வாணையின் இணைப்பு II–ல் குறிப்பிடப்பட்டுள்ள சிற்றுண்டி வகைகளிலிருந்து, குறிப்பிட்ட தினத்திற்கு, நிர்ணயிக்கப்பட்ட ஏதாவது ஒரு சிற்றுண்டியினை அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் வழங்கவும் ஒவ்வொரு வாரத்திலும் குறைந்தது இரண்டு நாட்களிலாவது, இயன்ற அளவு, அந்தந்த பகுதிகளில் விளையும்/கிடைக்கும் சிறுதானியங்களின் அடிப்படையிலான சிற்றுண்டியினைத் தயார் செய்து வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

v. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு இவ்வாணையின் இணைப்பு III–ல் உள்ள பொதுவான வழிமுறைகளை நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

vi. பெருநகர சென்னை மாநகராட்சி, ஏனைய மாநகராட்சிகள் மற்றும் அனைத்து நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் வாயிலாக காலை சிற்றுண்டி தயார் செய்து தொடர்புடைய இணைப்பு மையங்களுக்கு வழங்கவும் மாநகராட்சி / நகராட்சி பகுதிகளுக்கு

அருகில் உள்ள பேரூராட்சிகளில் அமைந்துள்ள பள்ளிகளுக்கு நகராட்சி நிர்வாகத் துறையின் கீழ் இயங்கும் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் வாயிலாக காலை சிற்றுண்டி தயார் செய்து தொடர்புடைய இணைப்பு மையங்களுக்கு வழங்கவும் ஏனைய அனைத்து பேரூராட்சிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளைப் பொறுத்தவரை அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

vii. மேலே பத்தி 8(ii)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொடர் மற்றும் தொடரா செலவினத்தை இத்திட்டத்தை செயல்படுத்தும் முகமை துறைகளுக்கு பிரித்து வழங்க சமூக நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

viii. மாவட்டந்தோறும் சமையல் உபகரணங்களை மேலே பத்தி 8(ii)–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினைப் பயன்படுத்தி நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி வாங்கி வழங்க அனுமதி வழங்கப்படுகிறது.

9. மேலே பத்தி–8(ii)–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

"2236–சத்துணவு 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102–மதிய உணவு– மாநிலச் செலவினங்கள் BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்துப் பள்ளி நாட்களிலும் அரசுத் தொடக்கப் பள்ளி மாணவ, மாணவியருக்கு காலைச் சிற்றுண்டி வழங்குதல் 309 – உதவித்தொகை –03– குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
(IFHRMS த.தொ.கு: 2236 02 102 BG 30903) "

10. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 07/DS(SA)/2023, நாள்.06.06.2023–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுன்சோங்கம் ஜடக் சிரு**
**முதன்மைச் செயலாளர்**

பெறுநர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நல இயக்குநர், சென்னை–15.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,சென்னை–3.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.

பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை—28.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை—6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6.
சிறப்பு அலுவலர், இல்லம் தேடிக் கல்வி மற்றும் திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், சென்னை.6.
மின் ஆளுமை இயக்குநர், சென்னை.2.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை—35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை—18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை—I/II), சென்னை—18.
சம்மந்தப்பட்ட மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை—9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை—9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளர் நிதித் துறை அவர்களின் முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை—9.
அரசு முதன்மைச் செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை—9.
நிதித்துறை, சென்னை—9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை.9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இரா. சி. சுப்ரமணி 07/06/2023
பிரிவு அலுவலர்.

7-6-2023

## இணைப்பு-1

**(அரசாணை (நிலை) எண்.33, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4-1) துறை, நாள். 07-06-2023)**

**பள்ளிகளின் விவரம்**

**I. பெருநகர சென்னை மாநகராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் - ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி

| வ.எண் | மாநகராட்சியின் பெயர் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை | 358 |

**II. பிற மாநகராட்சிகள்**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் - நகராட்சி நிர்வாக இயக்குநர்.

| வ.எண் | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 29 |
| 2. | கோயம்புத்தூர் | 121 |
| 3. | கடலூர் | 23 |
| 4. | திண்டுக்கல் | 16 |
| 5. | ஈரோடு | 59 |
| 6. | காஞ்சிபுரம் | 37 |
| 7. | கன்னியாகுமரி | 42 |
| 8. | கரூர் | 31 |
| 9. | கிருஷ்ணகிரி | 35 |
| 10. | மதுரை | 74 |
| 11. | சேலம் | 85 |
| 12. | தஞ்சாவூர் | 37 |
| 13. | தூத்துக்குடி | 18 |
| 14. | திருச்சி | 74 |
| 15. | திருநெல்வேலி | 40 |
| 16. | திருப்பூர் | 120 |
| 17. | திருவள்ளூர் | 19 |
| 18. | வேலூர் | 85 |
| 19. | விருதுநகர் | 7 |
| மொத்தம் | | 952 |

**III. நகராட்சி**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்.

| வ. எண் | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர் | 12 |
| 2. | செங்கல்பட்டு | 25 |
| 3. | கோயம்புத்தூர் | 109 |
| 4. | கடலூர் | 54 |
| 5. | தருமபுரி | 13 |
| 6. | திண்டுக்கல் | 13 |
| 7. | ஈரோடு | 17 |
| 8. | கள்ளக்குறிச்சி | 15 |
| 9. | காஞ்சிபுரம் | 9 |
| 10. | கன்னியாகுமரி | 28 |
| 11. | கரூர் | 16 |
| 12. | கிருஷ்ணகிரி | 11 |
| 13. | மதுரை | 12 |
| 14. | மயிலாடுதுறை | 20 |
| 15. | நாகப்பட்டினம் | 29 |
| 16. | நாமக்கல் | 46 |
| 17. | நீலகிரி | 24 |
| 18. | பெரம்பலூர் | 4 |
| 19. | புதுக்கோட்டை | 24 |
| 20. | இராமநாதபுரம் | 32 |
| 21. | இராணிப்பேட்டை | 44 |
| 22. | சேலம் | 61 |
| 23. | சிவகங்கை | 24 |
| 24. | தென்காசி | 28 |
| 25. | தஞ்சாவூர் | 24 |
| 26. | தேனி | 40 |
| 27. | திருப்பத்தூர் | 45 |
| 28. | திருவள்ளூர் | 47 |
| 29. | திருவாரூர் | 24 |
| 30. | தூத்துக்குடி | 16 |

| | | |
|---|---|---|
| 31. | திருச்சிராப்பள்ளி | 22 |
| 32. | திருநெல்வேலி | 15 |
| 33. | திருப்பூர் | 59 |
| 34. | திருவண்ணாமலை | 46 |
| 35. | வேலூர் | 21 |
| 36. | விழுப்புரம் | 28 |
| 37. | விருதுநகர் | 25 |
| | மொத்தம் | 1082 |

**IV – நகர்ப்புறப் பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகள்**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – நகராட்சி நிர்வாக இயக்குநர்.

<table>
<tr><th>வ. எண்</th><th>மாவட்டம்</th><th>பள்ளிகளின் எண்ணிக்கை</th><th></th></tr>
<tr><td>1.</td><td>செங்கல்பட்டு</td><td>3</td><td rowspan="16">i. உணவு சமைத்தல்<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அமைந்துள்ள ஒருங்கிணைந்த மையத்தின் மூலம்<br>ii. உணவு பரிமாறுதல்<br>பேரூராட்சிகளின் இயக்குநர், அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் வாயிலாக</td></tr>
<tr><td>2.</td><td>கோயம்புத்தூர்</td><td>11</td></tr>
<tr><td>3.</td><td>கடலூர்</td><td>12</td></tr>
<tr><td>4.</td><td>திண்டுக்கல்</td><td>14</td></tr>
<tr><td>5.</td><td>ஈரோடு</td><td>6</td></tr>
<tr><td>6.</td><td>கன்னியாகுமரி</td><td>47</td></tr>
<tr><td>7.</td><td>கரூர்</td><td>12</td></tr>
<tr><td>8.</td><td>நாமக்கல்</td><td>23</td></tr>
<tr><td>9.</td><td>இராணிப்பேட்டை</td><td>7</td></tr>
<tr><td>10.</td><td>சேலம்</td><td>20</td></tr>
<tr><td>11.</td><td>சிவகங்கை</td><td>2</td></tr>
<tr><td>12.</td><td>தென்காசி</td><td>12</td></tr>
<tr><td>13.</td><td>தஞ்சாவூர்</td><td>1</td></tr>
<tr><td>14.</td><td>தேனி</td><td>24</td></tr>
<tr><td>15.</td><td>திருச்சிராப்பள்ளி</td><td>4</td></tr>
<tr><td>16.</td><td>திருநெல்வேலி</td><td>4</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 17. | திருப்பத்தூர் | 4 | |
| 18. | திருப்பூர் | 10 | |
| 19. | திருவள்ளூர் | 2 | |
| 20. | விருதுநகர் | 1 | |
| மொத்தம் | | 219 | |

**V– ஊரகப் பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சி பகுதிகளில் அடங்கியுள்ள பள்ளிகள்**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் –மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

| வ. எண் | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர் | 6 |
| 2. | செங்கல்பட்டு | 43 |
| 3. | கோயம்புத்தூர் | 135 |
| 4. | கடலூர் | 60 |
| 5. | தருமபுரி | 58 |
| 6. | திண்டுக்கல் | 119 |
| 7. | ஈரோடு | 216 |
| 8. | கள்ளக்குறிச்சி | 29 |
| 9. | காஞ்சிபுரம் | 29 |
| 10. | கன்னியாகுமரி | 119 |
| 11. | கரூர் | 43 |
| 12. | கிருஷ்ணகிரி | 35 |
| 13. | மதுரை | 33 |
| 14. | மயிலாடுதுறை | 6 |
| 15. | நாகப்பட்டினம் | 15 |
| 16. | நாமக்கல் | 59 |
| 17. | நீலகிரி | 80 |

| | | |
|---|---|---|
| 18. | பெரம்பலூர் | 14 |
| 19. | புதுக்கோட்டை | 29 |
| 20. | இராமநாதபுரம் | 24 |
| 21. | இராணிப்பேட்டை | 30 |
| 22. | சேலம் | 130 |
| 23. | சிவகங்கை | 33 |
| 24. | தென்காசி | 28 |
| 25. | தஞ்சாவூர் | 70 |
| 26. | தேனி | 52 |
| 27. | திருப்பத்தூர் | 16 |
| 28. | திருவள்ளூர் | 36 |
| 29. | திருவாரூர் | 27 |
| 30. | தூத்துக்குடி | 45 |
| 31. | திருச்சிராப்பள்ளி | 47 |
| 32. | திருநெல்வேலி | 43 |
| 33. | திருப்பூர் | 100 |
| 34. | திருவண்ணாமலை | 49 |
| 35. | வேலூர் | 22 |
| 36. | விழுப்புரம் | 32 |
| 37. | விருதுநகர் | 19 |
| மொத்தம் | | 1931 |

**VI– ஊரகப் பகுதிகள்**

செயல்படுத்தும் அமைப்பு மற்றும் பொறுப்பு அலுவலர் – மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

| வ. எண் | மாவட்டம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரியலூர் | 471 |
| 2. | செங்கல்பட்டு | 568 |
| 3. | கோயம்புத்தூர் | 619 |
| 4. | கடலூர் | 1034 |
| 5. | தருமபுரி | 1053 |
| 6. | திண்டுக்கல் | 995 |
| 7. | ஈரோடு | 782 |
| 8. | கள்ளக்குறிச்சி | 623 |
| 9. | காஞ்சிபுரம் | 409 |
| 10. | கன்னியாகுமரி | 139 |
| 11. | கரூர் | 604 |
| 12. | கிருஷ்ணகிரி | 1350 |
| 13. | மதுரை | 917 |
| 14. | மயிலாடுதுறை | 386 |
| 15. | நாகப்பட்டினம் | 307 |
| 16. | நாமக்கல் | 714 |
| 17. | நீலகிரி | 187 |
| 18. | பெரம்பலூர் | 249 |
| 19. | புதுக்கோட்டை | 1298 |
| 20. | இராமநாதபுரம் | 868 |
| 21. | இராணிப்பேட்டை | 538 |
| 22. | சேலம் | 1122 |
| 23. | சிவகங்கை | 915 |
| 24. | தென்காசி | 308 |
| 25. | தஞ்சாவூர் | 1017 |
| 26. | தேனி | 311 |
| 27. | திருப்பத்தூர் | 525 |
| 28. | திருவள்ளூர் | 1007 |
| 29. | திருவாரூர் | 750 |
| 30. | தூத்துக்குடி | 544 |
| 31. | திருச்சிராப்பள்ளி | 901 |

| | | |
|---|---|---|
| 32. | திருநெல்வேலி | 286 |
| 33. | திருப்பூர் | 868 |
| 34. | திருவண்ணாமலை | 1535 |
| 35. | வேலூர் | 530 |
| 36. | விழுப்புரம் | 988 |
| 37. | விருதுநகர் | 748 |
| | மொத்தம் | 26466 |

<u>தொகுப்பு</u>

| வ.எண் | விவரம் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி | 358 |
| 2 | நகராட்சி நிர்வாகத்துறை | 2253<br>(952+1082+219) |
| 3 | தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் | 28397<br>(1931+26466) |
| | மொத்தம் | 31008 |

சுன்சோங்கம் ஜடக் சிரு
முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

ஆா. வி. சுப்விதை 07/06/2023
பிரிவு அலுவலர்

7-6-2023

## இணைப்பு–II

### பரிந்துரைக்கப்படும் மாற்றியமைக்கப்பட்ட காலை உணவு வகைகள்

பின்வரும் பல்வேறு விதமான சிற்றுண்டி வகைகளில் ஏதேனும் ஒன்றை குறிப்பிட்டுள்ள நாட்களில் வழங்க வேண்டும்.

| திங்கள் கிழமை – உப்புமா வகை | செவ்வாய் கிழமை – கிச்சடி வகை | புதன் கிழமை – பொங்கல் வகை |
|---|---|---|
| காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா உப்புமா / சேமியா உப்புமா / அரிசி உப்புமா / கோதுமை ரவை உப்புமா | காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா காய்கறி கிச்சடி / சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி | காய்கறி சாம்பாருடன் கூடிய ரவா பொங்கல் / வெண் பொங்கல் |

| வியாழக்கிழமை – உப்புமா வகை | வெள்ளிக்கிழமை – கிச்சடி வகை |
|---|---|
| காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா உப்புமா / அரிசி உப்புமா /ரவா உப்புமா / கோதுமை ரவை உப்புமா | காய்கறி சாம்பாருடன் கூடிய சேமியா காய்கறி கிச்சடி / சோள காய்கறி கிச்சடி / ரவா காய்கறி கிச்சடி / கோதுமை ரவை கிச்சடி |

ஒரு மாணவ/மாணவிக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி / ரவை / கோதுமை ரவை / சேமியா. உள்ளூரில் / அந்தந்த இடங்களில் விளையும் சிறுதானியங்கள் / சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக் கூடிய காய்கறிகள் (சமைத்த பின் 150 – 200 கிராம் உணவு மற்றும் 100.மி.கி காய்கறியுடன் கூடிய சாம்பார்) ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவை வழங்கலாம்.

**சுன்சோங்கம் ஜடக் சிரு**
**முதன்மைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

இரா.பி. சுப்ரமணி 07/06/2023
**பிரிவு அலுவலர்**

7-6-2023

**இணைப்பு–III**

**பொதுவான வழிமுறைகள் :**

1. காலை உணவுத் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து பள்ளி/ மையங்களிலும் காலை உணவு மாணவ/மாணவியருக்கு காலை 8.00 மணி முதல் 8.50 மணிக்குள் வழங்கப்பட வேண்டும்
2. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் தரம் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய (FSSAI) நெறிமுறைகளுக்கு உகந்தவாறு இருக்க வேண்டும்.
3. நகர்ப்புற பகுதிகளில் மையப்படுத்தப்பட்ட சமையல் அறை அல்லது வேறு ஏதேனும் தகுதிவாய்ந்த அமைப்பின் மூலம் அனைத்துப் பள்ளிகளிலும் உரிய வழிமுறைகளை பின்பற்றி தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப் படுத்துதல் வேண்டும். ஊரகப் பகுதிகளில் அந்தந்த பள்ளிகளிலேயே தரமான காலை உணவு வழங்குதலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
4. காலை உணவு தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் இயல்பான நிறம், மணம் உடையதாகவும், வேறு வெளிப் பொருட்களை கலக்காமலும் சுத்தமாக இருக்க வேண்டும்.
5. உள்ளூரில் சமைக்க பயன்படுத்தப்படும் சமையல் எண்ணெய் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், ஒரு முறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெயை கண்டிப்பாக மீண்டும் பயன்படுத்தக் கூடாது.
6. உணவு சமைக்க பயன்படுத்தப்படும் மசாலா பொருட்கள் ஏற்கத்தக்க விலையில், தரமானதாகவும், சுத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும் நியாயவிலை கடைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.
7. காய்கறிகளின் தரத்தை உறுதி செய்வதுடன் அவற்றை சமைப்பதற்கு முன் தண்ணீரில் நன்கு கழுவி பயன்படுத்தப்பட வேண்டும்.
8. தயார் செய்யப்பட்ட உணவினை மாணவ/மாணவியருக்கு வழங்கும் முன்பு பள்ளி மேலாண்மைக் குழு ஒவ்வொரு நாளும் தரத்தினை உறுதி செய்யும் பொருட்டு உணவினை ருசிபார்த்தல் வேண்டும்.
9. உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் அவ்வப்போது பள்ளிகளை ஆய்வு செய்து உணவின் தரத்தினை உறுதி செய்தல் வேண்டும்.

10. உணவு தயாரிக்கப்படும் இடத்தை தேர்வு செய்து அந்த குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே உணவு தயாரிக்கப்பட வேண்டும்.
11. உணவு தயாரித்தல் மற்றும் விநியோகிக்கும் பணிகளில் ஈடுபடும் சமையலர் மற்றும் உதவியாளர்கள் தன் சுத்தத்தை பராமரித்தல் வேண்டும்.

சுன்சோங்கம் ஜடக் சிரு
முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

07/06/2023
பிரிவு அலுவலர்

Copy
7.6.2023